Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 145/2024** |
| Sessions | .. | .. | } | |
| | | } | Prosecution – **PW3** | |
| Deposition of witness for | | } | Defence – | |
| | | } | Court – | |

| | | |
|---|---|---|
| Name | : | சரவணன் |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | காவல் துணை கண்காணிப்பாளர், புதுக்கோட்டை மாவட்டம். |
| Religion | : | |
| Age | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

<u>( 1 முதல் 9 எதிரிகள் ஆஜர், மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. மற்ற எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)</u>

முதல் விசாரணை–

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2018 ம் வருடம் இராமநாதபுரம் மாவட்டம தொண்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்த போது நிலைய குற்ற எண். 50/2018 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 336, 307 ன் படி பதிவு செய்யப்பட்ட வழக்கின் கோப்பு எனது விசாரணைக்கு 03.02.2019 அன்று பார்வைக்கு வைக்கப்பட்டது. மேற்படி வழக்குக்கோப்பின்படி கடந்த 07.05.2018 ம் தேதி தொண்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக மாரிச்சாமி இரவு 08.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருக்கும்போது முள்ளிமுனையை சேர்ந்த பால்ச்சாமி மகன் பால்கண்ணன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து புகார்தாரரின் கையெழுத்து பெற்று புகாரின்

தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.50/2018 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 336, 307 ன் படி பதிவு வழக்குபடி பதிவு செய்துள்ளார். பால்கண்ணன் கொடுத்த புகார் வாக்குமூலும் அ.சா.ஆ.1. மாரிச்சாமி சார்பு ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2**. சார்பு ஆய்வாளர் மாரிச்சாமி புகார் வாக்குமூலம் மற்றும் முதல்தகவல் அறிக்கையின் அசலை திருவாடானை நீதித்துறை நடுவர் அவர்களிடம் ஒப்படைக்க அனுப்பி வைத்துள்ளார். பின்பு மற்ற நகலை உயர்அதிகாரிகளுக்கும், ஒரு நகலை திருவாடானை காவல் ஆய்வாளராக பணிபுரிந்த மாரீஸ்வரி அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். ஆய்வாளர் மாரீஸ்வரி தனது விசாரணைக்கு கடந்த 07.05.2018 ம் தேதி அன்றே விசாரணைக்கு எடுத்து கொண்டு இரவு 09.00 மணியளவில் சம்பவ இடமான கருப்பன்கோவில் சென்று சாட்சிகள் செல்லசாமி, பாலு ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர், வரைபடம் தயார்செய்து மேற்படி சாட்சியம் சாட்சி கையெழுத்து பெற்றுள்ளார். பார்வை மகசர் **அ.சா.ஆ–3,**. வரைபடம் **அ.சா.ஆ–4** அன்றைய தினமே புகார் கொடுத்த பால்கண்ணன் மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லப்பட்ட சாட்சிகளான ராஜா, அழகுராஜா, மகாலிங்கம், ராம்பிரசாத், பால்சாமி, பாலு மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான பாலு, செல்லச்சாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். தனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிந்ததால் 08.05.2018 ம் தேதி அதிகாலை 05.00 மணிக்கு ஏ.மணக்குடி பஸ்ஸ்டாப் அருகே வைத்து 1 ம் எதிரி ராஜாவை கைது செய்துள்ளார். 1 முதல் 12 எதிரிகளை கைது செய்துள்ளளார். 4 ம் எதிரி கதிரவன் தானாக முன்வந்துகொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பாலு மற்றும் நல்லதம்பி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து மேற்படி சாட்சிகளிடம் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்றுள்ளார். 4 ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்தி மறைத்து வைத்திருக்கும் அருவாளை எடுத்து தங்களிடம் ஆஜர் படுத்துகிறேன் என்று சொன்னதன் அடிப்படையில் அவர் 06.30 மணியளவில் முள்ளிமுனை புயல் காப்பகத்திற்கு எதிரே உள்ள கருவேல்மரம் புதருக்குள் அழைத்துசென்று அதே சாட்சிகள் முன்னிலையில் 44 செமீ நீளமுள்ள இரும்பு கைப்பிடியுடன் கூடிய முன்பக்கம் வளைந்தநிலையில் உள்ள இரும்பு அருவாள் ஒன்றை கைப்பற்றியுள்ளார். கைப்பற்றும்போது அத்தாட்சி தயார் செய்து சாட்சிகள் பாலு, நல்லதம்பி ஆகியோரிடம் கையெழுத்து பெற்றுள்ளார். 4 ம்எதிரி கதிரவன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிய சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5. 4 ம் எதிரி அருவாளை எடுத்து ஆஜர் செய்தபோது தயார் செய்யப்பட்ட அத்தாட்சி **அ.சா.ஆ.6.** பின்பு எதிரிகளையும் கைப்பற்றப்பட்ட அருவாளையும் நிலையம் கொண்டு வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். கைப்பற்றப்பட்ட அருவாளை படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அவரால்தயார் செய்யப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.7.** பின்பு ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் சாட்சிகளாக கையெழுத்து

செய்து பாலு மற்றும் நல்லதம்பியை 08.05.2018 ம் தேதி விசாரித்து தனித்தனி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இந்நிலையில் நான் தொண்டி காவல் நிலைய ஆய்வாளராக பொறுப்பேற்றுகொண்டபிறகு புகார்தாரர் பால்கண்ணனுக்கு சிகிச்சை அளித்த திருவாடானை அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் பிரஸ்தீன் என்பவரை 22.03.2019 ம் தேதி விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழை பெற்று அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேடு அறிக்கையின் புகைப்பட நகல் **அ.சா.ஆ.8**. அதேதினம் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்த மாரிச்சாமியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து எனது விசாரணையை அன்றை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 336, 342, 307 ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சொன்ன தேதியில், இடத்தில், நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் விசாரணையின் மூலம் தெரிந்து கொண்டேன். வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.